கல்வி அமைச்சு

# இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமித்தல் -2024

1925/37 மற்றும் 28.07.2015 திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள படி, கல்வி அமைச்சின் கீழுள்ள 19 தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் 05 ஆசியர் கல்லூரிகளில் 2024.06.30 ஆம் திகதிக்கு உப ஆவணம் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு தகைமை வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைகள் குழுவின் உத்தரவின்படி விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவிப்பின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் “உதவிச் செயலாளர், ஆசிரியர் கல்வியியலாளர் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பெலவத்த, பத்தரமுல்ல” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமித்தல் -2024" எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

I. பதவிகள்:

(i) தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகள்
(ii) ஆசிரியர் கல்லூரிகளின் அதிபர்கள்
(iii) தேசிய கல்வியியற் கல்லூரிகளின் உப பீடாதிபதிகள்

*(நிலவும் பதவி வெற்றிடங்கள் மற்றும் சேவை நிலையங்கள் உப ஆவணம் I இல் தரப்பட்டுள்ளன)*

II. விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி - ***2024.07.12***

III. பதிவுத் தபாலில் அனுப்ப முன்னர் பூரணப்படுத்திய தங்களது விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை *(Scan Copy)* கீழ்வருமாறு மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

E- Mail = moesltes.branch@gmail.com
Subject = Appointment of the Officers in Grade I of the Sri Lanka Teacher Educators’ Service to the Posts – 2024 (Name & ID No)

## 02. தெரிவு செய்யும் முறை:

I. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் *1925/37* மற்றும் *28.07.2015* திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை பிரமாணக் குறிப்பின் *11ம்* பந்திக்கமைய மேற்குறித்த பதவிகளுக்காக தகைமையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில், விண்ணப்பதாரர்களின் விருப்பு மற்றும் சேவையின் தேவையின் அடிப்படையில் கல்விச் செயலாளரின் பரிந்துரையையும் கருத்தில் கொண்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

II. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் உப ஆவணம் *V* இன் படி, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் குறைந்த பட்சம் 35 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் மாத்திரமே உரிய பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவர்.

III. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு புள்ளி வழங்கும் முறை இந்த அறிவிப்பின் உப ஆவணம் *II* இல் தரப்பட்டுள்ளது.

IV. விண்ணப்பிக்க விரும்பும் சேவை நிலையங்கள் மற்றும் பதவிகளை எதிர்ப்பார்ப்பு தொடரொழுங்குக்கு அமைய விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 08 இன் கீழ் குறிப்பிடுதல் வேண்டும். திறமை அடிப்படையில் தாங்கள் விண்ணப்பித்த பதவியொன்றிற்கு தாங்கள் தகுதி பெறவில்லை எனின், சேவையின் தேவைகள் அடிப்படையில் பிறிதொரு சேவை நிலையமொன்றில் பதவிக்கு தங்களை நியமித்தல் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படலாம்.

V. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் செயலாளரின் இலக்கம் ESC/APP/SLTES/10/175/2017 மற்றும் 2021.02.23ம் திகதியுடைய நிட்டம்புவ சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி பதவிக்கு பிக்குமார்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் உப பீடாதிபதி பதவிக்கு பிக்குமார் மற்றும் ஏனைய ஆண் உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

VI. நியமிக்கப்பட்ட பதவியில் கடமைகளை பொறுப்பேற்பதை நிராகரிப்பதற்கு உத்தியோகத்தருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதால் நியமனம் கிடைக்கப்பெற்ற பதவியில் கட்டாயமாக கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும்.

VII. விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு மற்றும் தொடரொழுங்குவரிசையில் பின்னராக மாற்றம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

VIII. இந்த நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் திறமைகளுக்கு அமைய பதவிகளை வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்படுவது இக் கட்டத்தின் போது மாத்திரமே ஆகும்.

IX. நிர்வாகம் வசதிகளுக்காக பதவிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் என்பதாக வேறுபடுத்தப்பட்டிருந்தாலும், உரிய மொழி மூலத்தில் சேவையாற்றக்கூடிய எந்தவொரு உத்தியோகத்தரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

X. விண்ணப்பதாரர் ஒருவருக்கு தகைமைகள் இல்லை என்பதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அல்லது முன்னிலைப்படுத்தியுள்ள ஏதேனும் ஒரு விடயம் போலியானது என்பதாக பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு தவறான விடயத்தினை வேண்டுமென்றே மறைத்திருப்பின் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

## 03. தகைமைகள்:

I. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 03 வினைத்திறன்காண் தடை தாண்டலில் சித்தியடைந்த தரம் *I* உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

II. இவ் விண்ணப்பப் படிவங்களைக் கோருவதற்குரிய அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திற்கு முந்தைய 5 வருட காலப் பகுதியினுள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

III. சகல தகைமைகளையும் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல்.

**04.** உரிய கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைகள் பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி அமைச்சில் நடைபெறும். இந்த நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் திகதின் பின்னராக அறிவிக்கப்படும். இப் பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**05.** சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை காணப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருத்தில் கொள்ளப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவின் படி,

*2024 .06.24*ம் திகதி

ஜே.எம் திலகா ஜயசுந்தர

செயலாளர்

## உப ஆவணம் I

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக வெற்றிடங்கள் நிலவும் மற்றும் எதிர்காலத்தில் வெற்றிடமாகும் பதவிகள் மற்றும் சேவை நிலையங்கள் (2024.06.30ம் திகதிக்கு)

I. தேசிய கல்வியியற் கல்லூரிகள்

| தொடர் இல. | தேசிய கல்வியியற் கல்லூரி | பீடாதிபதி பதவிகள் | | உப பீடாதிபதி பதவிகள் | |
|---|---|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் |
| 1 | ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 01 | - |
| 2 | நில்வளா தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 02 | - |
| 3 | சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 03 | - |
| 4 | சியனே தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 01 | - |
| 5 | மஹாவெலி தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 02 | - |
| 6 | வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | - | 03 |
| 7 | ஸ்ரீஇ பாத தேசிய கல்வியியற் கல்லூரி | - | 01 | 03 | 01 |
| 8 | அட்டாளச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | - | 02 |
| 9 | மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி | - | 01 | - | 01 |
| 10 | புலதிசிபுர தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 03 | - |
| 11 | ருவன்புற தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 02 | - |
| 12 | ருகுணை தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 01 | - |
| 13 | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி | - | 01 | - | 02 |
| 14 | தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | - | 03 |
| 15 | மஹரகமை தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 03 | - |
| 16 | ஹாப்பிட்டிகம தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | - | - |
| 17 | பஸ்துண்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 02 | - |
| 18 | வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 01 | - |
| 19 | பேராதெனிய தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | - | - |
| | | 11 | | 36 | |

II. ஆசிரியர் கல்லூரிகள் :

| தொடர் இல. | ஆசிரியர் கல்லூரி | ஆசிரியர் கல்லூரி அதிபர் | |
|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் |
| 01 | அட்டாளச்சேனை ஆசிரியர் கல்லூரி | - | 01 |
| 02 | பலப்பிட்டி ஆசிரியர் கல்லூரி | 01 | - |
| 03 | கோப்பாய் ஆசிரியர் கல்லூரி | - | 01 |
| 04 | மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரி | - | 01 |
| 05 | கம்பளை ஆசிரியர் கல்லூரி | 01 | - |
| | | 02 | 03 |